## வெலிகம நகர சபை

## மாத்தறை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஜூன் 06 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான வெலிகம நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து 2013 ஜூன் 06 திகதி நன்கொடை ஒன்றாகக் கிடைத்திருந்த ரூபா 1,463,200 இற்கான WPRD 4473 கொண்ட 04 சில்லு டெபே டிரக்டர் வண்டியின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 33,161,493 ஆக காணப்பட்டதுடன் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் பெறுமதி

ரூபா 33,546,620 ஆக காணப்பட்டமையால் ரூபா 385,127 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) (i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,539,175 இருப்பு வகைப்படுத்தப்படாமல் பொது களஞ்சியத்தின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 31,950 இற்கான கையிருப்பு மருந்து தொகையின் பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் போது நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 26,200 இனால் குறைவாக பதியப்பட்டிருந்த பிழையை திருத்துவதற்காக அந்த கணக்குக்கு வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டும், எனினும் நாட்குறிப்பு இலக்கம் 01 இன் மூலம் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டு நூலகப் புத்தகங்கள் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக அப் பிழை சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அக் கணக்குகள் இடையே வித்தியாசம் ரூபா 52,400 இனால் இரட்டைப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆண்டிற்கான ரூபா 128,548 இற்கான கழியாட்ட வரி மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்ததுடன் அப் பெறுவனவினை காசேடு வரவு வைக்கப்பட்டு வருமானக் கடன்பட்டோர் கணக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக நாட்குறிப்பு இலக்கம் 94 இன் மூலம் மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் கணக்கு வரவு வைக்கப்பட்டு களியாட்ட வரி கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் 101 நாட்குறிப்பு பதிவுகள் காணப்பட்ட போதும் பேரேட்டில் 109 நாட்குறிப்பு பதிவுகளே காணப்பட்டன. அவ்வாறு 08 நாட்குறிப்புக்களின் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,248,668 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அப் பிழையினை சரிசெய்திருக்கவில்லை.

(எ) நாட்குறிப்பு 66 இன் மூலம் கடை வாடகை கட்டுப்பாட்டுக் கணக்கின் பில்போடப்பட்ட தொகை ரூபா 1,493,272 பெறுமதியினை கடை வாடகை வருமானத்திற்கு செலவு வைப்பதற்குபதிலாக டென்டர் வாடகை செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதனை சரிசெய்வதற்காக மீண்டும் நாட்குறிப்பு 136 இன் மூலம் டென்டர் வாடகைக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 77,261,152 இனை நிதிக் கூற்றுக்கில் காட்டியிருக்கவில்லை.

(ஐ) 2011 மற்றும் 2012 ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 981,295 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,899,604 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மற்றும் சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,997,947 ஆகக் காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 2,901,657 ஆகும்.

(ஆ) 07 வருமான விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,301,493 ஆகக் காணப்பட்டதுடன் தொகுதிக் கூட்டுத்தொகை பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 9,197,215 ஆகக் காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 104,278 ஆகும்.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,743,425 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 81,081,150 ஆகும்.

1.3.5 தீர்க்கப்படாத கணக்குகள்

---

(அ) சபையினால் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 11,591,157 பெறுமதியான 12 கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பொது வழங்கல்கள் கடன்கொடுத்தோர் ரூபா 1,778,698 ஆகக் காணப்பட்டதுடன் இவற்றில் கடந்த 7 வருடங்களுக்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 456,567 இற்கான களஞ்சியக் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறவேண்டிய வருமானக் கடன்பட்டோர் ரூபா 71,569,257 ஆக காணப்பட்டதுடன் இத் தொகையில் கடந்த 07 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்பட்ட ரூபா 50,868,411 இற்கான கடன்பட்டோர் மீதியினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

ரூபா 148,974,556 பெறுமதியான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | (i) நி.பி. 387 | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வங்கிக் கணக்குகளில் மேலதிகப் பற்று பேணப்படக் கூடாது. எனினும் காசேடுகளின் பிரகாரம் 03 வங்கிக் கணக்குகளில ரூபா 11,223,103 பெறுமதியான மேலதிகப் பற்று பேணப்பட்டிருந்ததுடன் 2012 மற்றும் 2013 ஆண்டுகள் தொடர்பாக ரூபா 393,867 மேலதிகப் பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) நி.பி. 507 | கையிருப்பின் பெறுமதியை ஆண்டுதோறும் கணக்குகளில் உட்படுத்துவற்காக ஆண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பௌதீக மெய்மையாதல் மேற்கொள்ளப்பட்டு நிலையான சொத்துக்களின் உளமை பற்றிய கூற்றொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 319,552 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,799,151 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி | 7,800 | 7,416 | 4,845 |
| வாடகை | 12,317 | 7,417 | 1,371 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 803 | 904 | 336 |
| ஏனைய வருமானம் | 46,702 | 36,048 | 89,212 |

2.2.2 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு | 2013 ஆண்டிற் காக பில் போடப்பட்ட தொகை | 2013 ஆண்டில் அறவீடுகள் | | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2013 ஆண்டின் போது பில் போடப்பட்ட வைகளில் பெறுவனவுகள் | 2012 மற்றும் அதற்கு முன்னர் நிலுவையாக இருந்த அறவீடுகள் | 2013 ஆண்டிற் கான நிலுவை தோகை | 2012 மற்றும் முன்னைய ஆண்டுகள் |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி | 5,103 | 5,906 | 3,503 | 2,659 | 2,402 | 2,443 |
| டென்டர் வாடகை | 60 | 2,457 | 2,347 | 60 | 109 | - |
| கடை வாடகை | 903 | 1,553 | 1,085 | - | 468 | 903 |

2.2.3 வீதவரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு வீதவரி நிலுவை மீதி ரூபா 5,103,124 ஆக காணப்பட்டதுடன் 2013 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,659,619 தொகையளவே அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவைத் தொகையில் இருந்து அறவிடப்பட்டிருந்தது நூற்றிற்கு 52 வீதம் மாத்திரமே

2013 ஆண்டிற்கான வீதவரி பில்போட்டவைகளின் பெறுமதி ரூபா 5,906,332 ஆக காணப்பட்டதுடன் 2013 ஆண்டின் போது அறவீடுகள் ரூபா 3,503,892 ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான வீதவரி பில்போட்டவைகளில் அறவிடப்பட்டிருந்தது நூற்றிற்கு 59 வீதம் மாத்திரமே.

2.2.4 வாடகை

மீளாய்வாண்டிற்கான வாடகை பில்போட்டவைகளின் பெறுமதி ரூபா 2,457,377 ஆக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான அறவீடுகள் ரூபா 109,408 ஆக காணப்பட்டமையால் ஆண்டின் போது அறவிடப்பட்டவைகளின் சதவீதம் நூற்றிற்கு 4 மாத்திரமே ஆகும்.

2.2.5 கடை வாடகை

மீளாய்வாண்டின் போது கடை வாடகை, பில்போடப்பட்டவைகளின் பெறுமதி ரூபா 1,553,722 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது அறவிடப்பட்டவைகள் ரூபா 1,085,024 ஆக காணப்பட்டமையால் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 69 மாத்திரமாகும். வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைத் தொகையாகிய ரூபா 903,038 தொகையில் 2013 ஆண்டின் போது பணம் ஏதும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 விளம்பர அறிவித்தல் கட்டணம்

மீளாய்வாண்டின் போது 08 விளம்பர அறிவித்தல்களுக்காக ரூபா 52,620 அறவிடப்பட்டிருந்ததுடன் 2012 ஜுலை 12 திகதிய இலக்கம்

எஸ்என்/எம்ஆர்/பீ/வெலி.ந.ச/வி/2012/01(11) கொண்ட ஐய வினாவின் மூலம் அவதானிக்கப்பட்ட ரூபா 800,175 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த தொகை பின்வருமாறு

| | | ரூபா. |
|---|---|---|
| (அ) | நீதிமன்றத் தண்டப்பணம் | 164,069 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 7,781,611 |

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 மனித வள முகாமைத்துவம்

---

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | மிகை |
|---|---|---|---|
| நிறைவேற்று | 05 | 05 | |
| இரண்டாம் தர | 32 | 32 | |
| ஆரம்ப தர | 91 | 92 | 01 |
| அமைய/ தற்காலிக/ ஒப்பந்த | 10 | 25 | 15 |
| | 138 | 154 | 16 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கின் பிரகாரம் பதவியணிச் சம்பளம் மற்றும் மந்திரிமார் படிக்கான செலவு ரூபா 33,391,216 ஆகக் காணப்பட்ட போதும் உள்ளூராட்சி ஆணையாளரினால் ரூபா 31,393,729 மாத்திரமே மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தமையால் வித்தியாசம் ரூபா 1,997,487 ஆகும்.

(இ) திறைசேரி செயலாளரின் முறையே 2002 ஜனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 திகதிகளைக் கொண்ட முகாதைத்துவச் சேவை சுற்றுநிருப இலக்கம் 14 மற்றும் இலக்கம் 28 மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அமைய, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்த்தல் இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன் அவ் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக 25 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,017,613 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.2 முகாமைத்துவச் திறமையின்மை

---

(அ) 1997 முதல் 2010 ஆண்டு வரை செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,433,089 இற்கான கணக்காய்வு கட்டணம் 2014 ஏப்ரல் 09 திகதி வரை செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகள் எண்ணிக்கை 840 ஆகும். எனினும் பராமரிக்கப்படும் வீதி விளக்குகளின் எண்ணிக்கைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளவாறான

தொகையினை இனங்கண்டிருக்கவில்லை. மேலும் 2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்கான மின்சார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. எனினும் 2012 ஆண்டின் போது விண்ணப்பிக்கப்பட்டிருந்த ரூபா 136,618 தொகையும் 2013 ஆண்டிற்கான ரூபா 98,676 தொகையொன்றும் மீளளிப்பு செய்திருக்கவில்லை.

4. கணக்கு விடயத்தன்மையும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் இடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் சபையின் பாதீடு பலன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 இணக்கத்திற்கு வந்திருக்காத கணக்காய்வு ஐய வினாக்கள்

-------------------------------------------------------------------------------------------

2013 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த 4 கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் அவதானிக்கப்பட்ட விடயங்கள் 2014 ஜூன் 05 திகதி வரை இணக்கத்திற்கு வந்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்